




# PURASAI TIMES

The Neighbourhood Weekly

www.purasaitimes.com

Free Circulation in and around : • PURASAWALKAM • KILPAUK • ANNA NAGAR • MOGAPPAIR • AYANAVARAM • PERAMBUR

VOL. XXXI NO. 08 2025 MAY 25 - MAY 31 **1525th Issue Ph : 4551 8154, 98409 37719** PAGES 8







## தமிழ்நாடு ஒருங்கிணைந்த பத்திரிக்கையாளர்கள் சங்கம் சென்னை மாவட்ட பேரவைக் கூட்டம்



தமிழ்நாடு ஒருங்கிணைந்த பத்திரிக்கையாளர்கள் சங்கம் சென்னை மாவட்ட பேரவை கூட்டம் 23.5.2025 வெள்ளிக்கிழமை அன்று காலை 10:35 மணி அளவில் ஹோட்டல் அக்ஷயம் அண்ணா நகரில் நடைபெற்றது. தலைமை : தோழர் S.சந்திரசேகரன் மாவட்டத் தலைவர் தோழர் D. கிறிஸ்டோபர் மாநிலத் தலைவர் : தமிழ்நாடு ஒருங்கிணைந்த பத்திரிகையாளர்கள் சங்கம், தோழர் G.K.ஸ்டாலின் நிறுவனர் : தமிழ்நாடு ஒருங்கிணைந்த பத்திரிகையாளர்கள் சங்கம், தோழர் D.சத்திய நாராயணன் மாநில பொதுச் செயலாளர், தோழர் S.இந்திரகுமார் மாநில பொருளாளர், தோழர் P.R.S. (எ) சுப்பிரமணி தலைவர் தமிழ்நாடு ஓய்வூதியப் பத்திரிக்கையாளர்கள் நல சங்கம் மற்றும் மாநில செயற்குழு உறுப்பினர்கள் : தோழர்கள்.

## ஸ்ரீ மருடி அம்மன் ஆலயத்தில் சித்ரா பௌர்ணமி திருவிழா



அழைப்பிதனை ஏற்று 12/5/2025 சித்ரா பௌர்ணமி திருவிழாவிற்கு வருகை தந்து நிகழ்ச்சியினை சிறப்பித்த என் உயிரினும் மேலான ஆருயிர் அண்ணன் மாண்புமிகு, இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை மற்றும் சென்னை பெருநகர் வளர்ச்சி குழு அமைச்சர் ஆருயிர் அண்ணன் திரு. பி.கே. சேகர் பாபு அவர்களுக்கும் மற்றும் அண்ணியார் திருமதி. சாந்தி சேகர்பாபு தம்பதியினர் விழாவில் கலந்துகொண்டு விழாவினை சிறப்பித்தனர்..!!! எனது நண்பர்கள் குழுவின் மனமார்ந்த கோடான கோடி நன்றிகளையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறோம்..!! நிகழ்ச்சி ஏற்பாடு A. கிஷோர் குமார், B. ரஜினிபாலாஜி.









## அதிகாலையில் தண்ணீர் குடிப்பதால் கிடைக்கும் நன்மைகள்

அதிகாலையில் வெறும் வயிற்றில் தண்ணீர் குடிப்பதால் கிடைக்கும் நன்மைகளில் முதன்மையாக குடல் சுத்தமாகும். அதற்கு தண்ணீர் குடித்தவுடன், சிறிது நேரத்திலேயே மலம் கழிக்கக்கூடும். இப்படி தினமும் தவறாமல் மலம் கழித்தாலேயே, உடலில் உள்ள கழிவுகளானவை முற்றிலும் வெளியேறிவிடும். தண்ணீரானது உடலின் மூலைமுடுக்குகளில் தங்கியுள்ள நச்சுகளை சிறுநீர் மூலமாக வெளியேற்றிவிடும். வெறும் வயிற்றில் குடித்து வந்தால், உடலில் உள்ள கழிவுகள் மற்றும் நச்சுகள் வெளியேறி, விரைவில் பசி எடுக்க ஆரம்பித்துவிடும். வெறும் வயிற்றில் தண்ணீர் குடிப்பதால், இரத்தத்திலுள்ள சிவப்பணுக்களின் வளர்ச்சியானது அதிகரித்து, இரத்தமானது அதிகப்படியான ஆக்ஸிஜனை கொண்டிருப்பதால், உடலானது எனர்ஜியுடன் இருக்கும். பெரும்பாலானோருக்கு உடலில் நீர்ச்சத்து குறைவாக இருப்பவர்கள் தினமும் அதிகாலையில் வெறும் வயிற்றில் தண்ணீர் குடித்து வந்தால், உடலின் நீர்ச்சத்தானது அதிகரித்து தலைவலி குறையும். மேலும் அல்சர் ஏற்படாமல் தடுக்கலாம். எடையை குறைக்க நினைப்பவர்கள், அதிகாலையில் வெறும் வயிற்றில் தண்ணீர் குடித்து வந்தால், உடலில் தங்கியுள்ள நச்சுகளுடன், உடலின் மெட்டாபாலிசம் அதிகரிப்பதால் தேவையற்ற கொழுப்புகளும் கரைந்து வெளியேறி, உடல் எடைகுறைய உதவியாக இருக்கும்.

குடலானது சுத்தமாக இல்லாவிட்டால், முகத்தில் பருக்கள் வந்தால் சருமமானது அழகை இழந்துவிடும். எனவே தினமும் தண்ணீரைக் குடித்து வந்தால், குடலியக்கம் சீராக நடைபெற்று, முகம் பருக்களின்றி பொலிவுடன் காணப்படும்.

## விலைமதிப்பற்ற மனிதனாய் வாழ்வது எப்படி?

ஒரு கலைச் சிற்பி ஒரு நாள் தெருவில் நடந்து போய்க் கொண்டிருக்கும் போது ஒரு பெரிய பாறாங்கல் ஒரு கடையின் அருகில் இருப்பதைக் கண்டார். கடைக்காரரிடம் அக்கல்லை தான் உடுத்துச் செல்லலாமா என்று கேட்டார். அதற்கு கடைக்காரர் தாராளமாய் எடுத்துச் செல்லுங்கள். கடைக்கு வருபவர்கள் இக்கல்லினால் தடுக்கி விழுகிறார்கள்.

இத்தடைக்கல் எனக்குத் தேவையில்லை என்றார். சிற்பி அக்கல்லை எடுத்துச் சென்று ஆறுமாத காலமாக தன் கலை திறத்தால் கவின் நயத்தால் அக்கல்லை ஒரு அழகான சிற்பமாக செதுக்கி எடுத்தார். வழியில் போவோர் வருவோர் எல்லாம் அச்சிற்பத்தை வாங்க போட்டி போட்டுக் கொண்டு முன் வந்தனர். அவர்களுள் கடைக்காரரும் ஒருவர். அவர் அதிக விலை கொடுத்து அச்சிற்பத்தை வாங்கி தன் கடைமுன் வைத்து அழகு பார்த்தார். கடைக்கு வருவோர் எல்லோரும் சிற்பத்தின் அழகை ரசித்தனர். கடைக்காரர் சிற்பியைப் பார்த்து இச்சிற்பம் செய்ய கல்லை எந்த மலையிலிருந்து கொண்டு வந்தீர்கள் என்று வினவினார். அதற்கு சிற்பி, ஐயா தங்களுக்கு ஞாபகம் இல்லையா, ஆறு மாதங்களுக்கு முன் உங்கள் கடை வாசலில் தடைக் கல்லா இருக்கிறது என்று கூறி, நான் கேட்டபோது எடுத்துச் செல்லுமாறு கூறினீர்களே! அந்தக் கல்தான் இது. தேவையற்ற பகுதியை செதுக்கி நீக்கி இதை நான் சிற்பமாக மாற்றியுள்ளேன் என்றார். கடைக்காரர் வியந்தார்.

ஆனாலும் மனம் வருந்தவில்லை, மகிழ்ச்சியுற்றார். மனம் இருந்தால், உழைப்பு இருந்தால் முயற்சி செய்தால் தடைக்கல்லையும் விலை மதிப்பற்றதோர் சிலையாக மாற்றலாம் என மகிழ்ந்தார். அதைப்போலவே மனதில் உள்ள தேவையற்ற செய்திகளை உணர்வுகளை நீக்கினால் விலைமதிப்பற்ற மனிதனாக மாறலாம்.

## சித்த வைத்திய சிறு குறிப்புகள்

மாதவிலக்குக் காலத்தில் அதிகமான உதிரப் போக்கு ஏற்பட்டால் உடல் அசதி உண்டாகும். சிலருக்கு வயிற்று வலி அதிகமாக இருக்கும். இதைப் போக்க, வாழைப் பூ கைப்பிடி எடுத்து அதை நன்றாக அரைத்து சாறு எடுத்து அதில் சிறிதளவு மிளகுத் தூள் சேர்த்து கொதிக்க வைத்து அதில் பனங்கற்கண்டு சேர்த்து அருந்தவும். திரிபலா சூரணம் ஒரு ஸ்பூன் ஆறிய நீரில் கலந்து அருந்தவும் ஒரு ஸ்பூன் அளவிற்கு திரிபலா லேகியமும் உண்ணலாம். இதனால் கருப்பை தொல்லைகள் முழங்கால் வலி , இடுப்பு வலி ஆகியவையும் நீங்கும்.

புதினாக் கீரையை இரண்டு நாட்கள் வெளியில் வைத்திருந்தால் உலர்ந்து விடும். உலர்ந்த புதினா இலையுடன் ஒரு ஸ்பூன் கருப்பு எள் ஒரு ஸ்பூன் சேர்த்து கஷாயம் செய்து தினம் ஒரு வேளை மூன்று நாட்கள் தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் மாதவிலக்குக் கோளாறுகள் குணமாகும்.

முருங்கை கீரையுடன், சிறிது கருப்பு எள் சேர்த்து கஷாயமாகச் செய்து தினம் ஒரு வேளை, ஒரு வாரம் சாப்பிட்டு வந்தால் தடைப்பட்ட மாதவிலக்கு சரியாகி விடும்.

## சித்த வைத்திய சிறுகுறிப்புகள்

உயிர் அணுக்களின் எண்ணிக்கை குறைவாக உள்ளவர்கள் அதாவது ஆண்மைக் குறைபாடு உள்ளவர்கள் தினமும் உணவில் பூசணிக்காய் கூட்டு, பூசணிக்காய் சாம்பார் என்று உண்டு வந்தால் ஆண்மைக் குறைப்பாடு நீங்கும்.

நரம்புத் தளர்ச்சி உள்ளவர்கள் சீரகத்தை லேசாக வறுத்து அத்துடன் கருப்பட்டி சேர்த்து சாப்பிட்டு வந்தால் நரம்புகள் வலுப்படும்.

சூட்டு உடம்பு உள்ளவர்கள் வாழைப்பூவுடன் பாசிப்பருப்பு சேர்த்து சமைத்து அதில் சிறிது நெய் சேர்த்து வாரம் இரண்டு முறை உண்டு வந்தால் உடற்சூடு குறையும்.

மாதவிலக்கு காலத்தில் வயிற்று வலி ஏற்பட்டால் சிறிது வாழைப்பூவை எடுத்து அதன் நடுக்காம்பை நீக்கிவிட்டு ஒரு டம்ளர் தண்ணீர் ஊற்றி அதில் வாழைப்பூவை இட்டு அடுப்பில் வைத்து நன்றாக கொதிக்க விடவும். பிறகு அதை வடிகட்டி குடித்தால் மாதவிலக்கு வயிற்று வலி நீங்கிவிடும்.

காய்ந்த திராட்சைப் பழத்தை தண்ணீரில் போட்டுக் காய்ச்சி, அந்த தண்ணீரையும், திராட்சையையும் சாப்பிட்டால் வலி மறைந்து போகும். பொட்டுக் கடலையை மாவாக்கி அதில் சிறிது சர்க்கரையை கலந்து சாப்பிட்டால் வலி குறையும்.

## பயனுள்ள குறிப்புகள்

குளிர் காலத்தில் காலையில் எழுந்ததும் இஞ்சி தட்டிப் போட்ட தேனீர் அல்லது சுக்குக்காப்பி சாப்பிட்டால் தொண்டைக்கு இதமாக இருக்கும். சளி சேராது.

தோசைக்கு மாவு அரைக்கும் போது ஒரு கப் சாதத்தையும் சேர்த்து அரைத்து வைத்து மறுநாள் தோசை சுட்டால் சுவையான பேப்பர் ரோஸ்ட் தயார்.

நல்லெண்ணெயில் வேப்பம்பூ போட்டு காய்ச்சி ஆறிய பின் தலைக்கு தேய்த்துக் குளித்தால் பொடுகெல்லாம் போய்விடும்.

குளிர்காலங்களில் சமையல் செய்யும் போது மிளகாயின் பயன்பாட்டைக் குறைத்துக் கொண்டு மிளகின் அளவை அதிகப்படுத்தினால் சுவையும் கூடும். குளிர்கால பாதிப்புகளும் தவிர்க்கப்படும்.

வடை மாவில் வேக வைத்த உருளைக்கிழங்கை மசித்து மற்றும் முந்திரிப் பருப்பை சிறு சிறு துண்டுகளாக உடைத்து கலந்து சுட்டால் வடை கரகரப்பாக இருக்கும். சுவையும் நன்றாக இருக்கும்.

கண்களில் தீப்பொறி பட்டு விட்டால், உடனே தாய்ப்பால் அல்லது விளக்கெண்ணெய் சில சொட்டுக்கள் விட்டால் நலமாகும்.

லட்டு பிடிக்கும் போது பூந்தியில் சிறிது எசென்ஸ் விட்டுக் கலந்து பிடித்தால் லட்டு சுவையாகவும், மணமாகவும் இருக்கும்.

## சித்த வைத்திய சிறு குறிப்புகள்

ஓமத்தை தண்ணீரிலிட்டு கொதிக்க வைத்து உடல் வலி உள்ள இடத்தில் ஊற்றினால் வலி போய்விடும். உடல் வலி இருக்கும் போது உணவில் இஞ்சியைச் சேர்த்தால் உடல் வலி குறையும். தேனீர் கொதிக்கும் போது சிறு துண்டு இஞ்சியை இடித்துப் போட்டு கொதிக்க வைத்து அருந்தினால் உடல்வலி குறையும். சின்ன வெங்காயம் (சாம்பார் வெங்காயம்) இதயத்திற்கு மிகவும் நல்லது. இரத்தத்தில் கொழுப்புச் சேர்வதை இயல்பாகவே கரைத்து உடலெங்கும் இரத்தத்தை கொழுப்பில்லாமல் ஓட வைக்க, உதவி செய்கிறது. வெங்காயப் பைபிரினோலிசின் என்ற பொருளைச் சுரந்து கொழுப்பு உணவுகள் மூலமாக இரத்த நாளங்களுக்குள் நுழைந்து கொழுப்புகளைக் கரைத்து விடுகிறது. இஞ்சியை உணவில் நாள்தோறும் சேர்த்துக் கொள்வதால் உடலில் உள்ள கொழுப்பை அது குறைக்கிறது. கறுப்பு திராட்சையோ அல்லது அதன் இரசத்தை அருந்தினாலும் கொழுப்பைக் குறைத்து நோய் எதிர்ப்புச் சக்தியைக் கொடுக்கிறது. கொழுப்பு அதிகமானால் கொள்ளு வேகவைத்து உண்ணலாம். கொள்ளுச் சாறு எடுத்து அருந்தலாம். கொள்ளுவும் கொழுப்பைக் குறைக்கும். "இளைத்தவனுக்கு எள்ளு; கொழுத்தவனுக்கு கொள்ளு" உடல் இளத்தவர்கள் எள்ளைக் கொண்டு செய்த பொருட்களை உண்டாலும், எள் எண்ணையைப் பயன்படுத்தினாலும் உடல் பருமனாகும்.

## சித்த வைத்திய சிறுகுறிப்புகள்

சிறுநீர் கடுப்பு நீங்க அன்னாசிப் பழச்சாறு அருந்தவும். நீர்கடுப்பு, நீர் சுருக்கு குணமாக நன்னாரி வேர் 5 கிராம் அரைத்து பசும்பாலில் கலந்து சாப்பிட்டு வரலாம். சிறுநீர் பாதையில் இரணம் தீர - சந்தனக் கட்டையை, பாலில் உரைத்து சாப்பிட்டு வரலாம். நீரிழிவு நோய் கட்டுப்பட வாழைப்பூவை வேக வைத்து பொரியல் செய்து சாப்பிட்டு வரலாம். இதனால் அஜீரணமும் அகலும். நரம்பு தளர்ச்சி நீங்க சேப்பங்கிழங்கை புளியுடன் சேர்த்து சமைத்து உண்டு வர பலவீனம் மாறும். ஆண்மை பெருகும். புளிக் கொழம்பில் வேக வைத்த சேப்பங்கிழங்கை போட்டு உண்டு வரலாம். வேகவைத்த சேப்பங்கிழங்கை தோலை உரித்து அதில் சிறிது புளி கரைசல் வெங்காயம் சேர்த்து வறுத்து உண்ணலாம். மாதுளம் பழச்சாற்றில் தேன் கலந்து தொடர்ந்து 41 நாட்கள் உட்கொள்ள நரம்பு தளர்ச்சி குணமாகும்.

மூலக்கடுப்பு நீங்க சுண்டைக்காய் சமைத்துச் சாப்பிடலாம். வேப்ப விதையில் வெல்லம் சேர்த்து அரைத்து 48 நாட்கள் சாப்பிட்டால் மூலநோய் குணமாகும்.



### உங்கள் செவியைச் சாய்த்து என்னிடத்தில் வாருங்கள்!

உங்கள் செவியைச் சாய்த்து, என்னிடத்தில் வாருங்கள்; கேளுங்கள்; அப்பொழுது உங்கள் ஆத்துமா பிழைக்கும்; தாவீதுக்கு அருளின நிச்சயமான கிருபைகளை உங்களுக்கு நித்திய உடன்படிக்கையாக ஏற்படுத்துவேன்.

பைபிள் - ஏசாயா 55



### பெருமை அடித்து கர்வம் கொள்பவரை அல்லாஹ் நேசிக்க மாட்டான்

அல்லாஹ்வை வணங்குங்கள்! அவனுக்கு எதையும் இணையாகக் கருதாதீர்கள்! பெற்றோர்களுக்கும் உறவினர்களுக்கும், அனாதைகளுக்கும், ஏழைகளுக்கும் நெருங்கிய அண்டை வீட்டாருக்கும், பயணத் தோழருக்கும், நாடோடிகளுக்கும், உங்கள் அடிமைகளுக்கும் நன்மை செய்யுங்கள்! பெருமையடித்து, கர்வம் கொள்பவரை அல்லாஹ் நேசிக்க மாட்டான்.

திருக்குர்ஆன் - அன்னிஸா 36



### யோகத்தை கைக்கொண்டு எழுந்திரு!

அக்ஞானத்துதித்து உள்ளத்திலுள்ள ஆத்மாவைப் பற்றிய ஐயத்தை ஞான வாளால் வெட்டி, யோகத்தைக் கைக்கொண்டு பாரதா எழுந்திரு.

ஸ்ரீமத் பகவத்கீதை அத். 4-42

எல்லாக் கேடுகளையும் உண்டு பண்ணுவது சந்தேகம். அது அக்ஞானத்தில் பிறந்து அந்தக்கரணத்தில் குடியிருக்கிறது. வெளிச்சம் வந்தால் இருள் தானே மறைவது போன்று ஆத்ம ஞானம் ஒன்றே ஐயத்தை அகற்றுவதற்கு உற்ற உபாயம். கேடு, தாபம், தவறு இவைகளை ஒழிக்கவல்லது ஞானம்.

## கொத்தமல்லியின் மகத்தான மருத்துவ ஆற்றல்

கொத்தமல்லியில் உள்ள கால்சியம், இரும்பு உள்ளிட்ட சத்துக்கள் இணைந்து செயலாற்றும்போது, ரத்தக் குழாய்களில் உள்ள அழுத்தம் நீங்கி, ஓய்வு பெறுகிறது. இதன்மூலம், ரத்த அழுத்தம் கட்டுக்குள் இருப்பதுடன் மாரடைப்பு, இதய நோய்க்கான வாய்ப்பும் குறைகிறது. கொத்தமல்லியில் இரும்புச்சத்து இருப்பதால், ரத்தசோகை வருவதற்கான வாய்ப்புக் குறைகிறது. உடலின் ஆற்றலை அதிகரிக்க, எலும்புகளின் ஆரோக்கியத்துக்கு, உறுப்புகளின் இயல்பான இயக்கத்துக்கு என்று பெரிதும் உதவுகிறது. நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கிறது.

எலும்புகளின் ஆரோக்கியத்துக்கு தேவையான வைட்டமின் இ இதில் நிறைவாக உள்ளது. செரிமானத்துக்கு உதவும் என்சைம்கள் சுரப்பதைத் தூண்டுவதைப் போல, இன்சுலின் சுரப்பையும் கொத்தமல்லி தூண்டுகிறது. இதன்மூலம், ரத்தத்தில் உள்ள சர்க்கரை அளவு கட்டுக்குள் வருகிறது. எனவே, சர்க்கரை நோயைத் தவிர்க்க விரும்புகிறவர்கள், சர்க்கரை நோயாளிகள் கொத்தமல்லியைத் தினமும் சேர்த்துக் கொள்ளலாம். இதில் உள்ள வைட்டமின் ஏ, சி, பாஸ்பரஸ் உள்ளிட்ட தாது உப்புகள், அத்தியாவசியக் கொழுப்பு அமிலங்கள் பார்வைக் குறைபாடுகள் வருவதற்கான வாய்ப்பைக் குறைக்கின்றன. கண்ணில் ஏற்படக்கூடிய அதிகப்படியான அழுத்தத்தைப் போக்குகிறது. வயதாகும்போது ஏற்படக்கூடிய பார்வைக் குறைபாடுகளைத் தாமதப்படுத்துகிறது. கொத்தமல்லியைத் தொடர்ந்து சாப்பிட்டு வருபவர்களுக்கு செரிமானப் பிரச்சனை போக்குகிறது.

## முகத்தில் உள்ள இறந்த செல்கள் நீங்கி சருமம் பொலிவு பெற வேண்டுமா?

ரோஸ் வாட்டர் ஒரு தேக்கரண்டி, தேன் ஒரு தேக்கரண்டி, கஸ்தூரி மஞ்சள் தூள் ஒரு தேக்கரண்டி மூன்றையும் கலந்து முகத்தில் தடவி 15 நிமிடங்கள் கழித்து குளிர்ந்த நீரில் கழுவவும்.

முட்டையின் வெள்ளைக்கருவுடன் ஒரு முழு தேக்கரண்டி பாதாம் ஆயிலை நன்கு கலக்க வேண்டும். இந்த கலவையை முகச்சுருக்கம் உள்ள இடத்தில் தடவி 30 நிமிடங்கள் கழித்து குளிர்ந்த நீரில் கழுவ, முகத்தில் உள்ள இறந்த செல்கள் நீங்கி, சருமத்திற்கு தேவையான புரோட்டீன்கள் கிடைக்கும்.

தினமும் குளிப்பதற்கு 20 நிமிடங்கள் முன்பு தேங்காய் எண்ணெய் அல்லது பாதாம் எண்ணெய் முகத்தில் தடவி குளித்து வர நாளடைவில் முகம் பொலிவு பெறும்.

## Velammal Hosts State-Level U-11 FIDE Chess Championship



The 37th Tamil Nadu State Under-11 Open & Girls FIDE Rated Chess Championship 2025 was successfully conducted by Velammal Matric Hr. Sec. School. Over 600 young talents from across the state participated, showcasing their skills in strategic gameplay. The event featured a □50,000 cash prize along with several exciting prizes, making it a memorable and motivating experience for all budding chess champions. The championship witnessed outstanding performances, as young players displayed their passion and talent for the sport, contributing to the grand success of the event.

## Vehicle Check conducted 21.05.2025



A vehicle check was conducted on Wednesday 21.05.2025 at Purasaiwakkam Doveton Signal under the leadership of Vepery Police Station Inspector K Raju. They checked all related Records of the vehicle.


For Advertisement Contact : 98409 37719 / 2661 3111 / 4551 8154



**Resale Flat for Sale @ Purasaiwakkam, Next to Saravana Stores**

Spacious 1700 Sq.ft. flat with UDS of 870 Sq.ft.,
3 BHK with attached baths,
30 years old,
Suits Residential / Commercial

Contact : Hanu Reddy Realty
99400 24724 / 93555 36909


## Roman Numerals

I = 1 V = 5 X = 10 L = 50 C = 100 D = 500 M = 1000

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| I 1 | II 2 | III 3 | IV 4 | V 5 | VI 6 | VII 7 | VIII 8 | IX 9 | X 10 |
| XI 11 | XII 12 | XIII 13 | XIV 14 | XV 15 | XVI 16 | XVII 17 | XVIII 18 | XIX 19 | XX 20 |
| XXI 21 | XXII 22 | XXIII 23 | XXIV 24 | XXV 25 | XXVI 28 | XXVII 27 | XXVIII 28 | XXIX 29 | XXX 30 |
| XXXI 31 | XXXII 32 | XXXIII 33 | XXXIV 34 | XXXV 35 | XXXVI 36 | XXXVII 37 | XXXVIII 38 | XXXIX 39 | XL 40 |
| XLI 41 | XLII 42 | XLIII 43 | XLIV 44 | XLV 45 | XLVI 46 | XLVII 47 | XLVIII 48 | XLIX 49 | L 50 |
| LI 51 | LII 52 | LIII 53 | LIV 54 | LV 55 | LVI 56 | LVII 57 | LVIII 58 | LIX 59 | LX 60 |
| LXI 61 | LXII 62 | LXIII 63 | LXIV 64 | LXV 65 | LXVI 66 | LXVII 67 | LXVIII 68 | LXIX 69 | LXX 70 |
| LXXI 71 | LXXII 72 | LXXIII 73 | LXXIV 74 | LXXV 75 | LXXVI 78 | LXXVII 77 | LXXVIII 78 | LXXIX 79 | LXXX 80 |
| LXXXI 81 | LXXXII 82 | LXXXIII 83 | LXXXIV 84 | LXXXV 85 | LXXXVI 88 | LXXXVII 87 | LXXXVIII 88 | LXXXIX 89 | XC 90 |
| XCI 91 | XCII 92 | XCIII 93 | XCIV 94 | XCV 95 | XCVI 96 | XCVII 97 | XCVIII 98 | XCIX 99 | C 100 |
| CC 200 | CCC 300 | CD 400 | D 500 | DC 600 | DCC 700 | DCCC 800 | CM 900 | M 1000 | X̅ 10000 |


# EASY TRAVELS



**Not Call Taxi**
**Minimum 5 Hours**



**INNOVA, INNOVA CRYSTA & MINI BUS (21 Seater)**

**Available for Local, Marriages, Airport, Outstation etc.**

**21 seater A/c & Non A/c**

**Local Minimum 5 hours 50 Kms**
**Outstation 250 Kms Coverage Per Day**










**Contact : 98409 37727**

## உயிர்காக்கும் உடல் எடை குறைப்பு (பேரியாட்ரிக்) அறுவை சிகிச்சையில் வெற்றி - தென் இந்தியாவில் முதன்முறையாக, அபூர்வமான மரபணு குறைபாட்டால் பாதிக்கப்பட்ட பங்களாதேஷ் நாட்டைச் சேர்ந்த 5 வயது சிறுமிக்கு லைஃப்லைன் மருத்துவமனையில் வெற்றிகரமான சிகிச்சை





சென்னை, தமிழ்நாடு - தென்னிந்திய மருத்துவ வரலாற்றில் முக்கியமான சாதனையாக, லைஃப்லைன் குழுமத்தின் இணை நிர்வாக இயக்குநரும், மேம்பட்ட சிறுதுளை மற்றும் உடல் எடை குறைப்பு அறுவைசிகிச்சை நிபுணருமான டாக்டர் அனிருத் ராஜ்குமார் மற்றும் லைஃப்லைன் குழும தலைவர் மற்றும் மூத்த அறுவைசிகிச்சை நிபுணரான டாக்டர் J.S. ராஜ்குமார் ஆகியோர் இணைந்து, வங்கதேசத்தைச் சேர்ந்த 5 வயது சிறுமிக்கு தென்னிந்தியாவில் முதன்முறையாக உடல் எடை குறைப்பு அறுவைசிகிச்சை செய்து சிறந்த வெற்றியை பெற்றுள்ளனர்.

Prader-Willi Syndrome என்ற அபூர்வமான மரபணு குறைபாடால் ஏற்பட்ட மிகுந்த உடல் பருமனால் (Obesity) பாதிக்கப்பட்டிருந்தாள். நடக்க முடியாமல், சுவாசிக்கவே சிரமப்பட்டு, இரத்த அழுத்தம், நீரிழிவு, கலீரலில் கொழுப்பு படிதல், Bow Leg Deformity என்ற வளைந்த கால்கள் என பல கடுமையான உடல்நிலை பிரச்சனைகளை சந்தித்து வந்தாள்.

மருத்துவ குழுவினர் இந்த சிறுமிக்கு தேவையான பரிசோதனைகள் செய்து, குடும்பத்தினரிடம் கலந்து ஆலோசித்து, விவரங்களை எடுத்துரைத்த பிறகு, இந்த அபூர்வமான மற்றும் ஆபத்தான அறுவைசிகிச்சையை மிக நுட்பமாக செய்து வெற்றிகரமாக முடித்தனர்.

அறுவை சிகிச்சைக்கு பிறகு வெறும் இரண்டு வாரங்களில் குழந்தை 8 கிலோ எடை குறைந்து, சுவாசிக்கும் திறன் மேம்பட்டு, எளிதாக நடக்க ஆரம்பித்துவிட்டாள். வரும் 6 மாதங்களில் மேலும் 10 முதல் 15 கிலோ வரை எடை குறையும் என்று மருத்துவர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

இருப்பினும், இந்த அறுவைசிகிச்சை ஒரு துவக்கமே. குழந்தையின் நிலையான ஆரோக்கியத்திற்காக குழந்தை மருத்துவர், ஊதச்சத்து நிபுணர், உடற்பயிற்சி நிபுணர், உளவியலாளர் மற்றும் உடல் பருமன் சிகிச்சை நிபுணர்கள் என பல துறை நிபுணர்கள் இணைந்து தொடர்ந்து கவனம் செலுத்த வேண்டும் என்று மருத்துவர்கள் தெரிவித்தனர்.

“இந்த சிகிச்சை வெறும் சாதனை அறுவைசிகிச்சை அல்ல. இது சிறுவர்களில் காணப்படும் மிகப்பெரிய உடல் பருமனின் (Obesity) அபாயத்தை நினைவூட்டும் விழிப்புணர்வு அழைப்பாகும். குழந்தைகளின் ஆரோக்கிய வாழ்விற்காக துரித நடவடிக்கைகள் மற்றும் முழுமையான பராமரிப்புகள் அவசியம்,” என்று டாக்டர் அனிருத் ராஜ்குமார் தெரிவித்தார்.

லைஃப்லைன் மருத்துவமனை, அனைத்து பெற்றோர்கள் மற்றும் பராமரிப்பாளர்களுக்கு விடுக்கும் வேண்டுகோள் என்னவென்றால் - குழந்தைகளின் எடை அதிகரிப்பை சாதாரணமாக எண்ணாமல், சரியான நேரத்தில் மருத்துவ உதவியை நாடுங்கள். குழந்தைகள் ஆரோக்கியமாகவும், மகிழ்ச்சியாகவும் வாழும் வாய்ப்பை பெறும் வகையில் பாதுகாப்பு அளிப்பது மிகவும் அவசியம்.

முன்னணி அறுவை சிகிச்சை நிபுணர்கள் Dr. அனிருத் ராஜ்குமார், MBBS, DNB (Surgery), FMAS, MRCS, FIBC (Bariatric), ரோபோடிக் மற்றும் லாபரஸ்கோபிக் உயர் உடல் பருமன் அறுவை சிகிச்சை நிபுணர் இணை நிர்வாக இயக்குநர் - லைஃப்லைன் மல்டி ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை.

Dr. J.S. ராஜ்குமார், M.S., F.I.C.S., Dip. N.B. (SURG.), F.R.C.S. (ENG.), F.R.C.S. (EDIN.), F.R.C.S. (GLASGOW), F.R.C.S. (IRELAND), F.I.M.S., F.A.I.S., F.R.M.S. (LONDON), F.A.E. (GASTRO), F.A.C.G. (USA), F.I.C.A. (USA), F.I.A.G.E.S., Dip M.I.S. (FR.) தலைவர் மற்றும் முதன்மை அறுவை சிகிச்சை நிபுணர்.

Dr. K.R. தர்மேந்திரா, MBBS, MS, DNB, FMAS, DMAS, FICRS, FIAGES, FALS (UGI), FALS (ROBOTIC), FALS (BARIATRIC), FAGIE., ரோபோடிக் மற்றும் லாபரஸ்கோபிக் அறுவை சிகிச்சை நிபுணர்.

Address : Lifeline Multispeciality Hospitals: No.47, New Avadi Road, Kilpauk, Chennai.Contact : 9677222333.

Patient : Name Mayesha siddika, Age - 5, Address - Chapainawabgang, Bangladesh Father : Juelrana, Mother : Zohra khatun.

## What to Eat

**Hydrating Fruits:**

Incorporate a variety of hydrating fruits into your diet, such as watermelon, strawberries, cucumbers, and oranges. These fruits have high water content, helping you stay hydrated and refreshed during hot days. They're also rich in essential vitamins and minerals, promoting overall well-being.

**Cooling Beverages:**

Stay hydrated with refreshing beverages like coconut water, lemonade, and herbal teas. Coconut water is a natural electrolyte-rich drink, perfect for replenishing lost fluids on hot days. Freshly squeezed lemonade provides a burst of vitamin C and helps quench thirst. Herbal teas like mint or chamomile can be served cold and offer a soothing way to stay hydrated.



# VELAMMAL MATRIC. HR. SEC. SCHOOL | VELAMMAL NEXUS

T.S. KRISHNA NAGAR, MUGAPPAIR EAST, CHENNAI - 600 037.

# CLASS X BOARD EXAMINATION 2024-25



SCHOOL 1st MARK
SRI GOWRI K

498 MARK OUT OF 500



KARTHIGA V 497/500
GURUSHARAN K 497/500
AFRIN FATHIMA S 495/500
CHARAN KUMAR M 495/500
KARTHICK M 495/500
LAKSHITHA V R 494/500
NANDHAKUMAR A 493/500
KAVYA K 492/500
KAVYASHREE B 492/500



SONIKA SHRI S V 492/500
LASYA PRIYA B 491/500
SHIVARANJANI K 491/500
AFRAH ANJUM K 490/500
HARINI R 490/500
LAKSHITA T 490/500
JEFRIN J S 490/500
PRAJITH M 490/500

# ADMISSIONS OPEN 2025-26 FOR CLASS XI

SCHOLARSHIP AVAILABLE FOR DESERVING STUDENTS

GROUPS OFFERED * LANGUAGE : TAMIL / FRENCH / SANSKRIT

| 2502 | 2503 | 2708 | 2702 | 2608 |
|---|---|---|---|---|
| Computer Science, Language, English, Maths, Physics & Chemistry | Biology, Language, English, Maths, Physics & Chemistry | Commerce, B.Maths, Language, English, Accountancy & Economics | Commerce, Computer Application, Language, English, Accountancy & Economics | Zoology, Botany, Language, English, Physics & Chemistry |

044 - 26561166 / 26560063

VelammalNexus www.velammalnexus.com

## Vishal announces wedding with actress Sai Dhanshika



Popular Tamil actor and General Secretary of the South Indian Artistes' Association, Vishal, has officially confirmed that he will be tying the knot with actress Sai Dhanshika this August. The announcement was made during the audio launch event of Yogida, a film produced and headlined by Dhanshika, held in Chennai last evening.

Vishal had earlier stated that he would get married only after the completion of the new Nadigar Sangam building. With the construction now nearing completion, reports suggest that the inauguration of the new premises is scheduled for August 14.

During a recent interview, Vishal had hinted at his upcoming marriage, saying, "No matter how you look at it, I will be married in four months. I have met the girl, spoken to her, and it's a love marriage. I've been in love with her for about a month now. I'll reveal who she is when the time is right."

This naturally sparked widespread speculation in the film industry about the mystery woman in Vishal's life. On Monday morning, reports began circulating on social media suggesting that the woman in question was none other than actress Sai Dhanshika.

Putting an end to the speculation, Vishal took the stage during the Yogida audio launch and confirmed the news himself. He openly declared his love for Sai Dhanshika and announced that their wedding would take place this August.

Vishal also reiterated that the first wedding to be held at the new Nadigar Sangam premises would be his own. Following the official inauguration of the building, the couple is expected to hold their wedding ceremony there.

At 47, Vishal's long-awaited decision to get married has brought joy to his fans, and his union with 35-year-old Sai Dhanshika has been met with much celebration and support from the film fraternity and well-wishers alike.

## Release of Shanmuga Pandian's 'Padai Thalaivan' postponed




The release of actor Shanmuga Pandian's upcoming film Padai Thalaivan, initially scheduled for May 23, 2025, has been postponed due to theatre allocation constraints. This marks the second delay for the film, which was originally slated for a Pongal release earlier this year.

Shanmuga Pandian announced the postponement on his Instagram story, stating that the delay was caused by difficulties in securing adequate theatre screens. He added that the team is working to finalize a new release date, which will be announced soon.

Padai Thalaivan is directed by U. Anbu and features a screenplay and dialogues by Parthiban Desingu.

The film stars Shanmuga Pandian in the lead role, alongside Yamini Chander, Kasthuri Raja, Munishkanth, and Rishi Rithvik. Set against a forest backdrop, the action-adventure film includes an AI-generated appearance of the late actor-politician Vijayakanth, Shanmuga Pandian's father. The music is composed by Ilaiyaraaja.

**Happiness is not measured by the amount of money you have. It is measured by the wonderful people you have in your life.**

**Donate Blood & Eyes**

## Aarti Ravi attributes marital breakdown to third-party interference

In a heartfelt public statement, Aarti Ravi, wife of actor Ravi Mohan, addressed the dissolution of their marriage, attributing it to the involvement of a third party rather than internal marital issues.

She refuted allegations of being a "controlling wife," emphasizing her efforts to preserve the family unit.

Aarti questioned the timing of Ravi Mohan's claims of abuse, suggesting his continued presence in the marriage was voluntary until confronted about the third-party involvement.

She also countered Ravi's assertions of being kept away from their children, stating he has not sought visitation or custody. Expressing gratitude for public support, Aarti concluded her note by affirming her faith in the legal system and indicating that future matters would be addressed in court.

**For Advertisement Contact :**
**98409 37719 / 2661 3111 / 4551 8154**
**www.purasaitimes.com**




**PURASAI TIMES**
The Neighbourhood Weekly
The circulation of 82,000 copies of Purasai Times is done on every Sunday

**ADVERTISEMENT RATES**

| COLOUR | | | BLACK AND WHITE | | |
|---|---|---|---|---|---|
| One Sq.Cm | : | ₹ 65 | One Sq.Cm | : | ₹ 45 |
| Full Page | : | ₹ 58,500 | Full Page | : | ₹ 40,500 |
| Half Page | : | ₹ 29,250 | Half Page | : | ₹ 20,250 |
| Quarter Page | : | ₹ 14,265 | Quarter Page | : | ₹ 10,125 |
| Size 10 x 2 | : | ₹ 5,200 | Size 10 x 2 | : | ₹ 3,600 |
| Size 5 x 2 | : | ₹ 2,600 | Size 5 x 2 | : | ₹ 1,800 |

| | | |
|---|---|---|
| Front Page | Sq.Cm | ₹ 100/- |
| Back Page | Sq.Cm | ₹ 75/- |
| Inside Page | Sq.Cm | ₹ 65/- |
| Third Page | Sq.Cm | ₹ 70/- |
| Black & White Page | Sq.Cm | ₹ 50/- |

**GST 5% Extra**

Classified Rs. 500 Upto 20 words, Extra Addl. Per Word Rs.20/-

**OUR CONTACT ADDRESS**
Purasai Times
# 33, Mookathal Street, Purasawalkam,
Chennai - 600 007. (Near CSI Church)
Dial: 4551 8154 / 2661 3111
Mob: 98409 37727 / 98409 37717 / 98409 37719
E-mail : purasait@gmail.com

**FOR COMPLAINT OR IRREGULAR SUPPLY OF PAPER CALL :**
**97104 52204**
**PHOTO COMPLAINTS MAY BE SENT THROUGH WHATSAPP :**
**97104 52204**

**CUT-OFF TIME FOR CLASSIFIEDS ON FRIDAYS IS 9.30-11.30 a.m.**

*Rental / Wanted and other For More Advertisements Please refer Classified Bazzar.*

***Advertise on Business Offers, Rentals, Buying & Selling of Houses, Flats, Plots, by spending only Rs. 500/- through "CLASSIFIEDS".***
*(Rs. 500/- for the first 20 words and Rs. 20/- for every additional word)*
**Cut-off time for Classifieds on Friday from 9.30 a.m. to 11.30 a.m.**

*Advertise in*
**PURASAI TIMES CLASSIFIEDS**

**CLASSIFIED ADVERTISEMENTS are accepted at your Doorstep (Service Charges Rs.50)** # 33, Mookathal Street, (Next to CSI Church), Purasawalkam, Ch-7. Ph : 2661 3111, 98409 37719. 97104 52204

# CLASSIFIED BAZAAR

### BUYING & SERVICE

• **Good Price,** We Buy Old Lcd, Led Audios, Computer, Ups Battery A/C etc., service also undertaken. Contact: S.K ASSOCIATES - 9 4 4 4 1 4 9 3 3 5 , 8428880834.

• **Old TV LED,** LCD, Computer, Monitor, UPS, Invertor, Batteries, Heater, Generator, Laptop, Fridge, A/C, Hi Fi MusicSystem, Furnitures and all scrapes. Ct: 8 7 5 4 4 0 2 1 9 9 / 81898 02989.

### MUSIC CLASSES

• **Western Music Classes in Singing, Keyboard & Guitar Admissions open for June 2025! At Satya Schools, Purasawalkam Contact: 9840038626.**

### PEST CONTROL

• Termite Control Bed Bugs Control Cockroach Control, Quality service. Contact: 97104 52204 / 98409 37727.

### RENTAL

• **PURASAIWAKKAM ABIRAMI STREET,** 2 bedroom portion, II floor, two wheeler parking, seperate EB card, near schools, veg preferrable Ct: 99529 19465.

• **PURASAIWAKKAM,** 9, perumal 1st street, 1 BHK, rent rs.13,000, road facing, balcony portion, 2nd floor, direct EB card. ct : 99625 25259 / 88254 77720.

### FLAT FOR SALE

• **PURASAIWAKKAM,** Opp upcoming metro station, Next to Purasaiwalkam vasanth & co . Baba Foundation Flats, 1st floor, 950sq. ft, 2Bhk, CCP with lift.Ct: 9962387371 / 9952967164.

### COMMERCIAL SPACE FOR RENT

• **PURASAIWAKKAM,** First floor (1200+1100 sq.ft) Tana street, Purasaiwakkam, Ct: 98409 37727.

### SALE

• **KILPAUK,** Near Ormes Road, Duplex House, 1385 sq.ft. buildup area, UDS 765 sq.ft. and 1380 sq.ft. UDS 760 sq.ft. Rs. 2.10 Cr. contact 9840091981.

• **PURASAIWAKKAM,** 3000 sq.ft. near perambur railway station old house sale contact 9840091981.

• **THIRUMULLAI VOYAL,** 3349 sq.ft, Thirumullaivoyal, Rs. 1500 per sq.ft. Ct: AKG 9840091981.

• **PURASAIWAKKAM,** near spr city, built up, chargeable-1853(1600 built up, 510 sq.ft pvt terrace), 4th flr, UDS-803sq.ft, 2 car parks, 8yrs old. Rs.1.90cr(Nego) only veg. Ct: 9840091981.

• **ANNANAGAR,back to Chinmaya School, 1.5 ground, Rate 10.5 Crores (fixed), broker excuse, contact :9840937727.**

### C3 FITNESS

• Start your fitness today at vepery – 98840 97333 , 98843 96333/ kilpauk – 9176899333, 9176844333.

### ADMISSION OPEN

• **CSI. ST.MATTHIAS' ANGLO INDIAN HR. SEC. SCHOOL** Admissions open for 2025-2026. Ct: 044-25325317

• **VELAMMAL NEXUS** Admission open 2025-26 Contact 7358 390 408 www.velammalnexus.com.

**NEW FLATS**
**1 & 2 BHK**
**CHINDADRIPET**
**(Swaminaickan Street)**
**1080 sq.ft.**
**(1st & 3rd floor)**
**1097 sq.ft. (3rd floor)**
**No brokers please**
**CALL**
**98840 32003**

• **MOUNT SAFA NURSERY & PRIMARY** an islamic school, for the best academic and islamic education. Ct: 91 75500 92828/ 044 4858 5344

### DR.VANCHILINGAM HOSPITAL

• Advance Stroke and Neuro Care Now at Kilpauk, we provide the best care for the whole range of neurological challenges. Address: 829/2, Poonamallee High Road, Opp. KMC, Chennai-10. Contact : 89399 98108.

### TUITION

• **+1, +2, Chemistry Home Tuitions any time Schedule offered by a teacher specialist in chemistry No fear on equation we are here. check us with demo class. Centum Guaranteed. Ct:9444912555.**

**Love without condition**

**Learn to love without condition.**

**Talk without any bad intention.**

**Donate without any reason and reservation.**

**And most of all, Care for otherswithout any expectations.**

**Donate Blood & Eyes**

**FLAT FOR SALE**
**2 BHK, FLAT FOR SALE**
**915 SQ.FT., 2ND FLR,**
**UDS 535 SQ.FT.,**
**SEMI FURNISHED,**
**NORTH FACING, NO LIFT,**
**PARKING AVAILABLE,**
**BISHOP LANE,**
**PURASAIWAKKAM.**
**98410 94301**

**RENTAL**
**PERAMBUR,**
**Near Bus Depot,**
**Opp. Railway Station,**
**Venkataraman Street,**
**2 BHK, 1300 Sq.ft.**
**Duplex Flat, For Rent,**
**Family Preferred.**
**72007 46667**

**Flat for Sale**
**Kellys, 2BHK 1000 sq.ft.**
**UDS 300. 2nd Floor,**
**60 Lakhs Negotiable**
**Vardhaman Garden,**
**1st Street Kellys,**
**Chennai - 600 010.**
**Two Wheeler Parking Only**
**70921 63262**
**94443 57949**

**வாடகை**
கெல்லீஸ் 3rd floor,
2 BHK, பெயிண்டிங்,
டைல்ஸ், பேன், டியூப் லைட்,
கார்ப்பரேஷன் வாட்டர்,
போர் வாட்டர்,
டூ வீலர் பார்க்கிங்
பேச்சிலர் மட்டும்
பஸ் ஸ்டாப் அருகில்
ரூ.18000 வாடகை
**97909 19420**
**63855 19225**

**CLASSIFIED ADVERTISEMENTS**
**Rental, Sale, Real Estate, Tuitions, Wanted, etc., Rs. 500/- for 20 words only**
**Also accepted at your Doorstep**
**(Service Charges Rs.50/- Extra)**
**All Credit & Debit Cards are also accepted**

**WANTED**
**DISTRIBUTORS FOR MANUFACTURER OF HERBAL MOSQUITO AGARBATTI**
**VIVA ENTERPRISES**
**73396 42210**
**Email : kvnagarbatti@yahoo.com**

**Disclaimer**

The news and views published in articles and advertisements are fed by different people and advertisers for which the Publisher is not held responsible. Customers are requested to verify themselves well before purchase of goods and utilization of the services offered.

-Editor

**THIS BOX COST Rs.700/-**

*Praise the Lord*


**AKG REAL ESTATE**
**BUYING / SELLING & RENTALS**



**SALE**

➤ PERIYAR NAGAR, 1400 sq.ft, 3 BHK, Rs. 1cr.
➤ VILLIVAKKAM, 1500 sq.ft. INDIVIDUAL HOUSE, Ground 1st floor.
➤ GKM COLONY, NEAR LOCO 1200 sq.ft. Ground 1st & 2nd floor, Rs.2.10 Cr.
➤ KOLATHUR, 2 BHK, 888 sq.ft. Rs. 62 lakhs
➤ KILPAUK, Near Ormes Road, Duplex House, 1385 sq.ft. buildup area, UDS 765 sq.ft. and 1380 sq.ft. UDS 760 sq.ft. Rs. 2.10 Cr.

**Cell : 98400 91981**




## Marvellous Achievement by Velammalian



Miss.K.Sri Gowri of Velammal Matriculation Higher Secondary School, Mugappair East has scored 498 out of 500 in SSLC board examinations (2024-25) with centum in 3 subjects (Maths, Science & Social) and 99 marks in Tamil & English





## CSI EWART MATRICULATION & HR. SEC. SCHOOL
### 2024 - 2025 XII STD



BLESSY PENIEL V ( 1794495 )

| Subject | Int | Theory | Pra | Total | Pass |
|---|---|---|---|---|---|
| FRENCH | 010 | 073 | | 083 | P |
| ENGLISH | 010 | 082 | | 092 | P |
| PHYSICS | 010 | 056 | 020 | 086 | P |
| CHEMISTRY | 010 | 056 | 020 | 086 | P |
| COMPUTER SCIENCE | 010 | 059 | 020 | 089 | P |
| MATHEMATICS | 010 | 071 | | 081 | P |
| TOTAL | | | | 0517 | PASS |




## திரு. பி.கே. சேகர் பாபு மற்றும் திருமதி. சாந்தி சேகர்பாபு தம்பதியினர் சித்ரா பௌர்ணமி திருவிழாவை முன்னிட்டு ஸ்ரீ மருடி அம்மனை வழிப்பட்டனர்



கடந்த 12/5/2025 திங்கட்கிழமை அன்று அருள்மிகு ஸ்ரீ மருடி அம்மன் ஆலயத்தில் சித்ரா பௌர்ணமி திருவிழாவில் மாண்புமிகு, இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை மற்றும் சென்னை பெருநகர் வளர்ச்சி குழு அமைச்சர் அண்ணன் திரு. பி.கே. சேகர் பாபு அவர்களுக்கும் மற்றும் அண்ணியார் திருமதி. சாந்தி சேகர்பாபு தம்பதியினர் விழாவில் கலந்துகொண்டு விழாவினை சிறப்பித்தனர்..!!! எனது நண்பர்கள் குழுவின் மனமார்ந்த கோடான கோடி நன்றிகளையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறோம்..!! நிகழ்ச்சி ஏற்பாடு A. கிஷோர் குமார், B. ரஜினிபாலாஜி.

*If any interesting News & Views in your area Please Contact : 98409 37719*

**For Advertisement Contact :**
**98409 37719 / 2661 3111 / 4551 8154**
**www.purasaitimes.com**